සියලු ම හිමිකම් ඇවිරිණි /
முழுப் பதிப்புரிமையுடையது)
All right Reserved]

Success Scholar

மல்லிகை மாதிரி வினாத்தாள்

புலமை -03

5

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான மாதிரி பரீட்சை, 2019

வினாத்தாள் - I

45 நிமிடம்

ஆசிரியர் : அ.மு. தாஹாநஸீம்
0771100221

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீட்டு சரியென என உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன


● **தரப்பட்டுள்ள படங்களுடன் நெருங்கிய தொடர்புடைய மூன்று சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

01) 

1) நீதி, நிறை, கிலோகிராம்

2) நீதி, கிலோமீற்றர், பாத்திரம்

3) அறிவு, புத்தகம், தேடல்

02) 

1) போக்குவரத்து, பயணிகள், பேரூந்து

2) பயணம், பேருந்து, போக்குவரத்து

3) பேரூந்து, பயணம், போக்குவரத்து

● **3,4 ஆகிய வினாக்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.**

03) 7 5 6 4 3, 3 4 6 5, 5 6 4, ...

1) 64 2) 46 3) 56


04) சாந்தி , திக்கு, ..., வித்தை, ...:

1) குருதி, வைரம் 2) குருவி, தையல் 3) குன்று, கைதி

.

● 5, 6 ஆகிய வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

05) அருகே உள்ள உருவில் **A,B,C** ஆகியவற்றால் குறிக்கப்படுகின்றவற்றை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.



1) சிங்கம், ஊனுண்ணிவிலங்குகள், விலங்குகள்


2) எலி, நாய், விலங்குள்

3) பெண்கள், ஆண்கள், மனிதர்கள்

www.lkedu.lk

சுட்டெண்:.....

06)



மேலுள்ள உருவில் தவளையை வகை குறிப்பதற்குப் பயன்படுத்தத்தக்க எழுத்து எது?

1) **x** 2) **y** 3) **z**

● **கடையொன்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்தி 07ம், 08ம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

பொருள்	1kg இன் விலை	
	ரூபாய்	சதம்
பால் பக்கட்	150	00
தேயிலை	320	00
கடலை	160	00
அரிசி	110	00
கோதுமை	130	00

07) 250g தேயிலையும், 500g கடலையும் வங்கிய பின் ரூபாய் 500.00 தாளைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம்

1) ரூபாய் 340.00

2) ரூபாய் 245.00

2) ரூபாய் 345.00

08) கமால் கடைக்கு ரூபாய் 1000.00 கொண்டு சென்று சகலவகையான பொருட்களிலும் **1kg** வாங்கினால் கடைக்காரர் கொடுக்கும் மீதிப் பணத்தின் இருமடங்கு எவ்வளவு?

1) ரூபாய் 330.00 2) ரூபாய் 130.00 3) ரூபாய் 260.00

09) என்னிடம் சில புறாக்களும் சில மாடுகளும் இருந்தன. புறாக்களினதும், மாடுகளினதும் எண்ணிக்கை 60 உம் கால்களின் எண்ணிக்கை 150உம் ஆகும். என்னிடம் இருந்த புறாக்களின எண்ணிக்கை யாது?

1) 15 2) 30 3) 45

10) 6 நண்பர்கள் தங்களுக்கிடையே வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர். இவ் நண்பர்களிடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட வாழ்த்துக்கள் எத்தனை?

1) 30 2) 25 3) 15

11) 10 இற்கும் 30 இடையிலுள்ள எண்களில் இரட்டை எண்களில் 2 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

1) 7 2) 10 3) 11


12) தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது என்ற எண்ணுடன் இரண்டைக் கூட்டும் போது கிடைக்கும் எண்

1) 99900 2) 99911 3) 100002

www.ikedu.lk

● **பரீட்சையில் ஐந்து மாணவர்கள் மூன்று பாடங்களில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து வினாக்குக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

பெயர்	தமிழ்	கணிதம்	சுற்றாடல்
தயாளன்			
தமயந்தி			
தவம்			
தவசி			
தமிழினி			




13) தமிழ் பாடத்தில் 80 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் யார்?


1) தவசி, தவம் 2) தவம், தமயந்தி 3) தவசி, தமிழினி


14) முதலாம் நிலையிலுள்ள மாணவர் யார்?

1) தவம் 2) தவசி 3) தமிழினி

15)  இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 8 3) 9

16)  "கல்லறை" என்பதை இரகசியக் குறியீட்டில் எழுதும் போது இவ்வாறு அமையும் அதன் படி "கல்லூரி" என்பதை எழுதுதினால்

1)  2)  3) 

17) கீழே **A,B** என இரண்டு எண் தொடர்புகள் தரப்பட்டுள்ளன.

A - 5, 8, 13, 17, 21 **B** - 2, 4, 9, 16, 32

தொடர்கள் இரண்டும் ஒழுங்கான இரு எண் கோலங்களாக அமைவதற்கு **A** இலிருந்து ஓர் எண்ணை **B** இற்கும் **B** இலிருந்து ஓர் எண்ணை **A** இற்கும் இடம் மாற்றுதல் வேண்டும். இடமாற்றபட வேண்டிய இரு எண்களும் எவை?

1) 8 உம் 16 உம் 2) 8உம் 9 உம் 3) 17உம் 9 உம்

18) 312 = 36 உம்
313 = 49 உம்
314 = 64 உம்
315 = 81 உம்
316 = 100 உம் எனின்

612 = ... ஆகும் இங்கு வெற்றிடத்தில் வரவேண்டிய விடை யாது?

1) 81 2) 91 3) 121

www.lkedu.lk

● **19, 20 ஆகிய வினாக்களில் உள்ள கணிதச் செய்கைகளில் கட்டமிடப்பட்ட பகுதிக்குப் பதிலாகப் பிரதியிடக் கூடிய விடையைத் தெரிவு செய்க.**

19) **14 + [5 + 30] = 49**

1) **8+8+8+8+4** 2) **7+7+7+7+7** 3) **6+6+6+6+6+6**

20) **7 + 9 + [6 +18] = 40**

1) **6 X 5** 2) **6 X 7** 3) **6X 4**

21)


1 போத்தல் நீரின் நிறை	= 2 பால்மாப் பைக்கற்றுக்களின் நிறை
1 பால்மா பைக்கற்றின் நிறை	= 2 தேயிலைப் பைக்கற்றுக்களின் நிறை

அவ்வாறாயின் எந்தப் பையில் கூடுதலாக நிறை உள்ளது?

1) 

2) 

3) 

22) 

உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப்பொருளின் உச்சிகளின் எண்ணிக்கை யாது?

1) 0 2) 2 3) 3

● **பிழையான கருத்தினைத் தரும் கூற்றின் கீழ்க் கோடிடுக.**

23) 1) சிங்கம் ஒரு பிராணியாகும். அது மாமிச உண்ணியாகும்.
2) புலி காட்டில் வாழும் அது ஒரு முலையூட்டியாகும்.
3) மான் ஒரு பாலூட்டி அத்துடன் ஒரு ஊனுண்ணியாகும்.

24) 1) மரவள்ளி ஒரு வகை கிழங்காகும்.
2) மரவள்ளியை நாம் சமைக்கும் போது மூடி சமைக்க வேண்டும்.
3) மரவள்ளிக் கிழங்கில் மாம்பொருள் காணப்படுகின்றது.

www.lkedu.lk

● **உவமைத் தொடர்களுக்குப் பொருத்தமான மிகச் சரியான கருத்தை தெரிவு செய்க.**

25) அடியற்ற மரம் போல்

1) நேரான தன்மை 2) நிலையுள்ள தன்மை 3) உறுதியற்ற தன்மை

26) முயற்கொம்பைத் தேடி அலைந்தது போல்


1) இல்லாத ஒன்றை உருவாக்குதல்
2) இல்லாத ஒன்றை தேடி அலைதல்
3) சிறிய பொருளொன்றைத் தேடி அலைதல்

27) தற்போது எனது தந்தையின் வயது எனது வயதின் மூன்றுமடங்காகும். ஐந்து வருடங்களுக்குப் முன்னர் எனது தந்தையின் வயது அப்போதைய எனது வயதின் நான்கு மடங்காக இருந்தது. தற்போது எனது வயது எத்தனை வருடங்களாகும்?


1) 15 2) 12 3) 18


28) இரண்டு மனிதர்கள் ஒரு நாளில் 16 குழிகளைத் தோண்டுவர். ஒரு மனிதன் இரண்டு நாட்களில் தோண்டும் குழிகள் எத்தனை?


1) 14 2) 32 3) 16

29) 

நான்கு காதித நாடாக்களை இணைத்து ஒட்டி அவற்றின் மேல் படத்தில் உள்ளவாறு நிழற்றப்பட்டது. இதனை கழற்றி மேலிருந்து கீழாக 2413 என்ற ஒழுங்கில் ஒட்டினால் கிடைக்கும் உரு பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1) 

2) 

3) 

30)

3	15	6	7	14	18
6	8	25	31	34	4

உருவிலுள்ள எண்களின் மிகச் சிறிய ஒற்றை எண்ணையும் மிகப்பெரிய இரட்டை எண்ணையும் பெருக்கினால் வரும் விடை யாது?


1) 93 2) 102 3) 136

31) முக்கோண வடிவப் பூம்பாத்தியொன்றின் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் பார்க்கும் போது 12 பூச்சாடிகள் வீதம் தென்பட்டன. எனின் சுற்றிவர தென்பட்ட பூச்சாடிகளின் எண்ணிக்கை யாது?

1) 36 2) 39 3) 33

www.ikedu.lk

● **ஒவ்வவொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 49 சதுரங்களைப் பின்வரும் உரு கொண்டுள்ளது. இவ்வுருவை அவதானித்து 32, 33 ஆம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

32) 

அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரமீற்றாகும்?

1) $22\mathbf{cm}^2$

2) $21\mathbf{cm}^2$

3) $20\mathbf{cm}^2$

33) மேற்படி உருவின் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றராகும்?

1) **28cm** 2) **30cm** 3) **29cm**

34) செவ்வக வடிவக் கடதாசி ஒன்றின் நீளம் அதன் அகலத்தைப் போல் மூன்று மடங்காகும். கடதாசியின் அகலம் 6 சென்ரி மீற்றர் எனின், அக்கடதாசியிலிருந்த பக்கமொன்றால் 1 சென்ரி மீற்றர் அளவுடைய எத்தனை சதுரங்களை வெட்டி எடுக்க முடியும்?

1) 108 2) 100 3) 96

● **ஒவ்வவொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள் 25 சதுரங்களைப் பின்வரும் உரு கொண்டுள்ளது. இவ்வுருவை அவதானித்து 35, 36 ஆம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

L	M	U	Y	K
F	I	V	P	Z
A	G	O	D	T
E	S	B	J	X
W	C	N	H	R

35) ஆங்கில அரிச்சுவடி எழுத்துக்களில் அடுத்துவரும் இரண்டு எழுத்துக்கள் குறுக்காகவுள்ளன. இவ்வெழுத்துக்கள் எவை?

1) **A B** 2) **W X** 3) **Y Z**

36) ஆங்கில அரிச்சுவடி எழுத்துக்களில் ஒரு எழுத்து மேலுள்ள அட்டவணையில் தரப்படவில்லை. அவ்வெழுத்து யாது?

1) Q **2) R** **3) C**


37) $1\frac{3}{4}l + 1\frac{1}{2}l + 50ml$

அருகே தரப்பட்ட அளவுகளுக்கு சமனான அளவுகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1) $1l\,500ml + 1l\,500ml + 500ml + 200ml$

2) $1l\,250ml + 1l\,250ml + 750ml + 50ml$

3) $1l + 2l\,250ml + 750ml + 100ml$

38) 


அருகே தரப்பட்டுள்ள உருவிலுள்ள செங்கோண மூலைகளின் எண்ணிக்கையும் செங்கோணத்திலும் கூடிய கோணங்களின் எண்ணிக்கையும் முறையே

1) 8, 2


2) 10, 4

3) 12, 6


39) சம அளவுள்ள 5 வட்டங்கள் உள்ளன. ஒரு வட்டத்தின் சுற்றளவு 6m ஆகும். எனின் அம்புக்குறியினால் காட்டப்படும் தடித்த கோட்டுப் பயணப் பாதையின் தூரம் எவ்வளவு?




1) 12m 2) 15m 3) 16m

40) 


உருவிலுள்ள சதுரமுகியைப் பிரிக்கும் போது கிடைக்கும் வெட்டு முகம் எது?



1)



2)



3)

www.ikedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි /
முழுப் பதிப்புரிமையுடையது)
All right Reserved]

Success Scholar

மல்லிகை மாதிரி வினாத்தாள்

புலமை -03

5

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான மாதிரி பரீட்சை, 2019

வினாத்தாள் - II

1 மணி 15 நிமிடம்

ஆசிரியர் : அ.ம. தாஹாநஸீம்
0771100221

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
- விடையின் கீழ்க்கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க்கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீட்டு சரியென என உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க..

லூயி பாஸ்ட்டர் என்பவர் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆவார். பாஸ்ட்டர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். இவர் எதனையும் ஆராயும் இயல்பையும் சிந்தனைத் திறனையும் கொண்டவர். உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் எனக்கண்டு பிடித்தார். காற்றில் நுண்ணுயிர்கள் பல உள்ளன. அவையே நொதித்தல், அழுகல், பழுதடைதல் ஆகியவற்றுக்குக் காரணம் எனக் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

i) இங்கு குறிப்பிடப்படும் விஞ்ஞானி யார்?

.....

ii) எவ்வாறு உணவு பழுதடைகின்றது?

.....

iii) நுண்ணுயிர்கள் எங்கு காணப்படுகின்றது?

.....

iv) "நுண்ணுயிர்" என்பதை பிரித்தெழுதுக

.....

v) பந்தியில் வந்துள்ள மடக்கேறும், விசிறியும் உள்ள சொல் எது?

.....

vi) லூயி பாஸ்ட்டர் எதில் சிறந்து விளங்கினார்?

.....

02) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) உணவு உண்ணாமல் அல்லது உணவு இல்லாமல் பசியோடு இருக்கும் நிலை .....

(பட்டணி / பட்டினி)

ii) ஓவியங்கள், படங்களை வரைபவன் ..... (கலைஞன் / ஓவியன்)

03) கீழே தரப்பட்ட வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்கப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

i) அப்பா வந்தாலும் ..... (வருவார் / வருகிறார்)

ii) யானைக்கூட்டம் பயிர்களை ..... (அழித்தது / அழித்தன)

iii) லூயி பாஸ்ட்டர் பல கண்டுபிடிப்புக்களை .....

(அறிமுகப்படுத்தினார் / அரிமுகப்படுத்தினார்)

04) ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

அரசன் நீதியாக ஆட்சி புரிந்தான்.

.....

05) சோடிச் சொற்களின் தொடர்பை விளங்கி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

வைரவிழா ⟶ வெள்ளிவிழா

1) 25 ⟶ 60 2) 60 ⟶ 50 3) 60 ⟶ 25

06) "திங்கள்" என்பது எவ்வகைப் பெயர்ச்சொல்லாகும்?.....

www.lkedu.lk

சுட்டெண்:.....

07) வாக்கியங்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) இன்னலுடையோருக்கு **கைகொடுத்தல்** வேண்டும். தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து .....(ஆறுறதல் கூறுதல் / உதவுதல்) என்பதாகும்.

ii) நாம் **நட்டாற்றில்**விடக் கூடாது. தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து .....
(ஆபத்து வேளையில் கைவிடல் / விடடுச்செல்லல்)

08) கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

காலை மாலை எப்போதும்
கடவுள் நினைவே கொண்டவராம்.
.....
வீணாய்ப் போக்க மாட்டாராம்.

09) தரப்பட்டுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய தின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

இப்பாடலில் வரும் உவமானத்தை எழுதுக. .....

10) தரப்பட்டுள்ள வாக்கியங்களை தனிவாக்கியமாக எழுதுக.

உழவன் வயலை உழுதான். பின் தானியங்களை விதைத்தான்.

.....

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Railway station .....

ii) 

படத்துக்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

.....

12) ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) I will .....(come / coming) tomorrow.

ii) Clap your ..... (hand / hands)

13) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நான் தண்ணீர் குடிக்கிறேன். .....

www.lkedu.lk

14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

அபி செல்லம் கறன்ன யமுத? .....

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

துள்ளிப் பாயுங்கள்.....

16) 75243 என்னும் எண்ணில்,

i) இலக்கம் 5 உள்ள இடம் யாது? .....

ii) இலக்கம் 7 காட்டும் பெறுமானங்கள் யாது? .....

17)

250		
	642	
415		

கட்டத்திலுள்ள எண்களுள் 8 ஆல் வகுக்கப்படும் போது 2 மீதியாகும் எண் யாது?

.....

18) 2 கிலோமீற்றர் 50 மீற்றர் என்பதை மீற்றரில் எழுதுக. .....

19) விமானமொன்று இலங்கை நேரத்திற்கேற்ப 06:15 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, இலங்கை நேரத்திற்கேற்ப 11:30 மணிக்கு கட்டாரை அடைந்தது. பயணத்திற்குச் செலவிடப்பட்ட காலம் எவ்வளவு?

.....


20) ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபாய் 132.00 ஆக இருக்கும் போது முக்சக்கர வண்டியொன்றுக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 396.00 பெற்றோலுக்காகச் செலவாகியது. பெற்றோலின் விலை திடீரென ரூபாய் 17.00 ஆல் குறைக்கப்பட்டது எனின் பெற்றோலுக்காக முக்சக்கர வண்டிக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு செலவாகும்?

.....

21) ரூபாய் 28.00 விலையுள்ள பயிற்சிப் புத்தகங்களில் இரண்டையும் ரூபாய் 5.50 விலையுள்ள அழிறப்பரில் இரண்டையும் வாங்குவதற்கு ராணியிடம் ரூபாய் 60.00 மாத்திரம் இருந்தது அவளுக்கு இன்னும் எவ்வளவு தேவை?

.....

22)



இப்பாத்திரத்திரங்களில் காணப்படும் மொத்த நீரினது அளவு யாது?

.....

23) ஒரு வீதியை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்கு 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கும். வீதியின் அபிவிருத்து பணி 2015 ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

.....

24) பாடசாலைத் தோட்டத்தில் கமுகு மரங்கள் போல் மூன்று மடங்கு பனை மரங்களும் பனை மரங்களைப் போல் அரை மடங்கு ஜம்பு மரங்ளும் உண்டு. கமுகு மரங்களின் எண்ணிக்கை 120 எனின் அத்தோட்டத்தில் உள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை யாது?

.....


www.ikedu.lk

25) i) இவ்வுருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன.

.....


ii) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

.....



26) ஒரு நாளைக்கு சம்பளமாக தச்சன் ஒருவருக்கு ரூபாய் 1400.00வும் அவனது உதவியாளனுக்கு ரூபாய் 800.00 ம் கொடுத்து மூன்று நாளைக்கு வேலை செய்தார்கள் எனின், அவர்கள் இருவரும் மூன்று நாளைக்குப் பெற்ற கூலிகள் எவ்வளவு?


.....

27) 

உருவில் உள்ள நாற்பக்கலின் சுற்றளவு 18m ஆகும். பக்கம் AB யின் நீளம் 2m40cm உம் பக்கம் CD யின் நீளம் 6m70cm உம் பகம் AD யின் நீளம் 3m 70cm உம் ஆகும் BC யின் நீளம் யாது?

.....

28) உருவில் உள்ள உருளையில் இருக்கும்



i) தட்டையான மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது? .....

ii) வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

29) 8 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமுமான சுவருக்கு தீந்தை பூசுவதற்கு ஒரு லீற்றர் தீந்தை தேவை எனின், 10 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் உடைய சுவருக்கு தேவையான பெயின்ட் எவ்வளவு?

.....

● **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து, அதன் கீழ்க் கோடிடுக.**

30) கிளைகள் மூலமும் வித்துக்கள் மூலமும் முளைக்கச் செய்யப்படும் தாவரம்

1) வற்றாளை 2) முருங்கை 2) மிளகாய் 3) மரவள்ளி

31) கரப்பந்தாட்டக் குழுவில் உள்ள ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை.

1) 7 2) 6 3) 10 4) 9

32) தேசப்படம் ஒன்றில் ஆறுகளை குறித்துக்காட்டப் பயன்படும் நிறம்

1) மஞ்சள் 2) பச்சை 3) சிவப்பு 4) நீலம்

33) பாம்பாட்டி பயன்படுத்தும் ஓர் இசைக்கருவி

1) கொம்பு 2) கிட்டார் 3) புல்லாங்குழல் 4) மகுடி

34) காலாவதியான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளை உண்பதால் ஏற்படக்கூடிய விளைவு,

1) கண்டமாலை நோய் ஏற்படும் 2) சொறி ஏற்படும்

3) வயிற்றுவலி ஏற்படும் 4) கழிச்சல் நோய் ஏற்படும்.

www.ikedu.lk

35) நீர்ப் பாத்திரம் ஒன்றில் இடப்பட்ட பனிக்கட்டி காணப்படும் விதம்,

1)  2)  3)  4) 

36) இலங்கையின் தேசியக் குறியீடாகப் பயன்படுத்தும் பிராணி எது?

1) குரங்கு 2) கருங்குரங்கு 3) காட்டுக்கோழி 4) யானை

37) இலங்கையில் உள்ள மலைக்குன்று எது?

1) சிகிரியா 2) நமுனுகுலகந்த 3) கிரிகல்பொத்த 4) சிவனொளிபாதமலை

38) சுற்றாடலில் சேரும் அழுக்குகளை உண்டு, சுற்றாடலைச் சுத்தப்படுத்தும் பிராணி எது?

1) காகம் 2) பன்றி 3) பூனை 4) நாய்

39) சூடடிக்கும் இடத்தில் மாட்டை எவ்வாறு அழைப்பர்?

1) நாம்பன் 2) இடையன் 3) கும்கி 4) பொலிநடையன்

40) தாவரத்தில் கூடு அமைப்பதன் மூலம் தாவர வளரச்சிக்குத் தீங்கு விளைவிப்பது,

1) காகம் 2) முசுறு 3) அணில் 4) குயில்

41) நாட்டு மக்கள் அனைவரும் மிகவும் மதிக்க வேண்டிய தேசிய சொத்து,

1) பொது மைதானம் 2) தேசியக் கொடி

3) பாட நூல்கள் 4) பொது நூலகம்

42) மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்டது.

1) திசாவாவி 2) கலாவாவி 3) யோதவாவி 4) மின்னேரியா வாவி

43) படத்தில் காட்டப்பட்டுள்ள உரு எதனைக் குறிக்கின்றது?



1) இங்கே கழிவுகளைப் போட வேண்டாம்.

2) கழிவுகளை வீசவும்.

3) இங்கே கழிவுகளைப் போடவும்

4) இவ்விடத்தில் குப்பை போட வேண்டாம்.

44) தபாலகத்தில் இடம்பெற முடியாத சேவை

1) காசுக்கட்டளை மேற்கொள்ளுதல் 2) முத்திரை விற்றல்

3) பொதிகள் அனுப்புதல் 4) காசோலைகள் மாற்றுதல்

45) மண்ணை வளமாக்க உதவும் விலங்கு

1) நத்தை 2) மண்புழு 3) மரவட்டை 4) ஆமை

www.lkedu.lk

46) தோகை விரித்து அழகாக ஆடும் மயில் இனம் எது?

1) ஆண்மயில் 2) பெண்மயில்

3) இரண்டுமல்ல 4) ஆணும், பெண்ணும்

47) நீந்துவதன் மூலம் இடம்பெயரக் கூடிய பறவை எது?

1) கொக்கு 2) வாத்து 3) கோழி 4) பென்குயின்

48) பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவத்தை உடையன. வேறுபட்ட வடிவத்தை உடைய தாவர இலை எது?

1) வெற்றிலை 2) மிளகு 3) வட்டக்கண்ணி 4) திப்பிலி

49) கழிச்சல் நோயை உண்டாக்குவது,

1) இலையான் 2) சிலந்தி 3) நுளம்பு 4) வண்டு

50) நாம் யாவரும் யாரிடம் எப்போதும் விலகியிருக்க வேண்டும்?

1) போதைப்பொருள் வியாபாரி 2) மதபோதகர்கள்

3) கண் பார்வையற்றவர்கள் 4) ஆதரவு அற்றவர்கள்

51) வானில் சந்திரனின் மிகப்பெரிய வட்டம் தோன்றும் தினம்

1) பௌர்ணமிக்கு முதல் நாள் 2) நவமி தினத்திற்கு முதல் நாள்

3) பௌர்ணமி தினம் 4) பௌர்ணமி தினத்திற்கு மறுநாள்

52) காய், பழங்கள், வித்துக்கள் என்பவற்றை மட்டும் உண்ணும் பிராணி எது?


1) கிளி 2) முயல் 3) சிறுத்தை 4) ஆடு

53) சூரியன் உதிக்க முன்பு, கிழக்கு அடிவானில் பிரகாசமாகத் தோன்றும் கோள்

1) சுக்கிரன் 2) வியாழன் 3) சனி 4) புதன்

54) மனித உடலுழைப்பை மட்டும் சக்தி முதலாகக் கொண்டு இயங்கும் வாகனம்,

1) முச்சக்கர வண்டி 2) ஈருருளி 3) பேருந்து 4) மகிழூர்ந்து

55) 

இவ்வுபகரணம் பயன்படுத்துவது

1) மரப்பலகையில் துளையிட

2) சுரையை இறுக்க

3) ஏதேனும் ஒன்றை இறுக்கிப் பிடிக்க

4) திருகாணியை இறுக்க

www.lkedu.lk

56) உரோமங்களால் மூடப்படாத பிராணி எது?

1) முதலை 2) முயல் 3) செம்மறிஆடு 4) மாடு

57) மரங்களில் கூடு கட்டி வாழத் தெரியாத பறவை எது?

1) அணில் 2) காகம் 3) குயில் 4) குருவி

58) இலங்கையில் மிருகக்காட்சிசாலை அமைந்துள்ள இடம் எது?

1) கண்டி 2) யால 3) தெகிவளை 4) கொழும்பு


59) வானவில்லில் உள்ள நிறங்களை அவதானிப்பதற்காகத் தரம் நான்கு மாணவர்கள் மேற்கொண்ட செயற்பாட்டுடன் தொடர்புடைய படம் அருகே தரப்பட்டுள்ளது. இதில் சூரிய ஒளிபடும் வகையில் நீருள்ள பேசினில் வைக்கப்பட்டுள்ள பொருள் **A** யாது?

1) முகம்பார்க்கும் கண்ணாடி

2) பிளாஸ்ரிக் கீலம்

3) பலகைத் துண்டு

4) காட்போட் அட்டை



60. எனது பிறந்த நாள் வரும்வரை நான் பொறுமையின்றிக் காத்திருந்தேன். அப்பா எனக்கு பிறந்த நாள் பரிசாக ஒரு மடிக்கணினி வாங்கித் தருவதாக கூறியிருந்தமை எனக்கு மேலும் மகிழ்ச்சியைத் தந்தது **'எனது பிறந்த நாளைக் கொண்டாடிய விதம்'** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

www.kedu.lk